**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு**

**பாதுகாப்பு அமைச்சு**

# இலங்கை கடற்படை

# விலைமனுக்கோரல் (IFB)

## இலங்கை கடற்படையின் எடித்தர II, விக்ரம II கப்பலுகளுக்கான டீசல் இயந்திரம் மற்றும் கியர் பெட்டியுடன் தொடர்புடைய உதிரிப்பாகங்களை கொள்வனவுச் செய்தல்

**ஒப்பந்த இலக்கம். : MOD/SLN/06/2023 (SLNS Edithara II)**
**MOD/SLN/07/2023 (SLNS Wickrama II)**

1. இலங்கை கடற்படைக்காக பாதுகாப்பு அமைச்சின் வழங்கல் சபைத் தலைவர் சார்பாக கீழ்வரும் விடயங்களை பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடைய, வரவேற்கப்பட்ட மற்றும் திறமையான மனுதாரர்களிடமிருந்து மனுப்பத்திரங்களில் குறிப்பிட்டுள்ளவாறு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

   **இலங்கை கடற்படையின் எடித்தர II, விக்ரம II கப்பலுகளுக்கான** டீசல் இயந்திரம் மற்றும் கியர் பெட்டியுடன் தொடர்புடைய உதிரிப்பாகங்களை வழங்குதல், நிறுவுதல், பரிசோதித்தல் மற்றும் செயற்படுத்தல்.

2. விலைமனுக்கோரலானது சர்வதேச போட்டி நடைமுறைக்கேற்ப நடாத்தப்படும் (ICB).

3. கப்பலுகளுக்கான டீசல் இயந்திரம் மற்றும் கியர் பெட்டியுடன் தொடர்புடைய உதிரிப்பாகங்களை வழங்குதலில் ஆகக்குறைந்தது **05 வருட முன்னனுபவம்** காணப்படும் **சர்வதேச உற்பத்தியாளர்களது** உள்நாட்டு முகவர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் பாதுகாப்பு அமைச்சில் பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்கள் மற்றும் ஏனைய வரவேற்கப்பட்ட வழங்குனர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுவதோடு, அம்மனுக்கள் கீழ்வரும் காரணிகளுக்கு உட்படும்.

   அ. மேற்குறிப்பிட்ட உள்நாட்டு முகவர்கள் / வழங்குனர்கள் ஆகக்குறைந்தது 05 வருட வியாபார பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   ஆ. மனுதாரர் **கடந்த 5 ஆண்டுகளில்** ஆகக்குறைந்தது இதுபோன்ற 03 களை ஒப்பந்தங்கள் வெற்றிகரமாக பூரணப்படுத்தியிருக்க வேண்டியதோடு, அதில் 01 ஒப்பந்தம் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பானதாக காணப்பட வேண்டும், மேலும் அதன் ஒப்பந்த தொகையானது **100 மில்லியனுக்கும்** குறையாதிருக்க வேண்டும்.

   இ. காலத்தை குறைத்துக்கொள்வதற்கு இலங்கையில் உத்தரவாதத்துடன் புதுப்பிப்பு பணிகளுக்கு பங்களிப்ப-தற்காக விற்பனையாளருக்கு உரிய துறையில் பொறியியலாளர்களை உள்ளடக்கிய தொழில்நுட்ப ஊழிய குழாமினருடன் பொருத்தமான வேலைத்தள வசதிகள் காணப்பட வேண்டும்.

   ஈ. மனுதாரரால் கப்பலுகளுக்கான டீசல் இயந்திரம் மற்றும் கியர் பெட்டியுடன் தொடர்புடைய உதிரிப்பாகங்களை வழங்குவதில் அனைத்து பொறியியல் தொடர்பான உதிரிப்பாகங்களையுடைய பூரணமான செயன்முறைக்காக ஆகக்குறைந்தது 01 வருட விசாலமான உத்தரவாத கால வரையறை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

   உ. மனுதாரரால் உத்தரவாத கால வரையறைக்கு அப்பால் **10 வருடத்திற்கு** விற்பனையின் பின்னரான சேவை / தொழில்நுட்ப பங்களிப்பு மற்றும் மேலதிக பாகங்கள், மென் பொருள் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்குதல் தொடர்பில் உற்பத்தியாளர்களிடமிருந்து சான்றிதழ் வழங்குதல்.

   ஊ. உத்தரவாத காலத்தினுள் கப்பலுகளுக்கான டீசல் இயந்திரம் மற்றும் கியர் பெட்டியுடன் தொடர்புடைய உதிரிப்பாகங்களை வழங்குதல் தொடர்பில் வினவுதல், புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்காக இலங்கையினுள் அலுவலகமொன்று அல்லது உள்நாட்டில் பதிவு செய்யப்பட்ட முகவராக இருத்தல் வேண்டும்.

   எ. மனுதாரரால் முன்வைக்கப்படும் கப்பலுகளுக்கான டீசல் இயந்திரம் மற்றும் கியர் பெட்டியுடன் தொடர்புடைய உதிரிப்பாகங்களை வழங்குவதக்காக உற்பத்தியாளரால் பெற்றுக்கொடுக்கப்படும் தயாரிப்புச் சான்றிதழ் (OEM Certificate) சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

   ஏ. மனுதாரரால் அல்லது உற்பத்தியாளரால் உள்நாட்டு முகவருக்கு பெற்றுக்கொடுக்கப்படும் அதிகாரமளிப்பு சான்றிதழ் முன்வைக்கப்பட வேண்டும்.

4. ஒப்பந்தம் முடிவடையும் காலம் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாளிலிருந்து **180 நாட்காட்டி** நாட்கள் ஆகும்.

5. தகைமையுடைய மனுதாரர்களுக்கு மேற்குறிப்பிட்ட கொள்வனவுகளுக்கு சட்ட ரீதியிலான உரிமைகள் வழங்கப்பட வேண்டியதோடு, மனுதாரருக்கு 1987ஆம் ஆண்டு 3ஆம் இலக்கமுடைய பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் செல்லுப-டியாகும் வியாபார பதிவு காணப்பட வேண்டும். அவ்வாறே மனுதாரரால் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படும் போது வியாபார பதிவுச் சான்றிதழ் முன்வைக்கப்பட வேண்டியதோடு, இது தொடர்பில் முழு விபரங்களும் மனுப்பத்திரங்க-ளில் உள்ளடக்கப்படும். மேலும், 1987ஆம் ஆண்டு 3ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முக்கிய குறிப்புகள் சில பின்வருமாறு.

   "எந்தவொரு மனுதாரருக்காகவும் முகவரோ அல்லது உப முகவரோ, பிரதிநிதி அல்லது பெயரளவு பிரதியாக செயற்படும் எந்தவொரு நபரும் 10ஆம் சட்டத்திற்கேற்ப தாமும் அப்பொது ஒப்பந்தத்தில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டியதோடு, ரெஜிஸ்டாருக்கு 6ஆம் சட்டத்தின் கீழ் தகவல்கள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்"

   "எந்தவொரு நபரும் மனுதாரருக்காக முகவராக, உப முகவராக, பிரதிநிதியாக அல்லது பெயரளவு பிரதிநிதியாக செயற்படும் சந்தர்ப்பத்திர் அவரால் மேற்குறிப்பிட்ட சட்டத்திற்கு இணங்க தாமும் பொது ஒப்பந்தத்தில் பதிவு செய்வதற்கு முன்னர் ரெஜிஸ்டாரிடம் தான் முகவர், உப முகவர், பிரதிநிதி அல்லது பெயரளவு பிரதிநிதியாக அமர்த்துவது தொடர்பில் சான்றிதழை முன்வைக்க வேண்டும்"

   "1987ஆம் ஆண்டு 3ஆம் பொது ஒப்பந்த சட்டத்திற்கு இணங்க மனுதாரரால் மனுப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டுமென குறிப்பிடல்."

6. உற்பத்தியின் செயற்திறனை வெளிப்படுத்துவதற்கு தகைமையுடைய மனுதாரர் சர்வதேச தரச்சான்றிதழை முன்வைத்-தல்.

7. நிதித்திறன் மற்றும் ஏனையத் தேவைகள் முழுமையாக நிறைவு செய்த இறுதி **மூன்று (3) வருடத்தினுள்** சாதாரண வருடாந்த வருமானமாக **ரூ. 500,000,000.00** க்கு குறையாமலிருத்தல்.

8. இது தொடர்பில் ஆர்வமுடைய தகைமைப் பெற்ற மனுதாரர்கள் கீழே பந்தி 15 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் இலவசமாக கீழ்வரும் முகவரியில் மனுப்பத்திரங்களைப் பார்வையிட முடியும்.

9. மனுதாரர் மற்றும் அவர்களின் உள்நாட்டு முகவர் ஒருபோதும் அபகீர்த்தியாளர் பட்டியாளர் பட்டியலில் சேர்க்கப்படாமல் இருத்தல் வேண்டும்.

10. மனுதாரர்களால் கீழ்வரும் பந்தி 15 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினை சமர்ப்பிப்பதன் ஊடாக அல்லது பாதுகாப்பு அமைச்சுக்கு மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூ.40,000.00** ஐ பணமாக செலுத்துவதன் ஊடாக ஆங்கில மொழி மூலமான அச்சிடப்பட்ட மனுப்பத்திரமொன்றை **2023 டிசம்பர் மாதம் 25ஆம்** திகதி முதல் **2024 பெப்ரவரி மாதம் 04ஆம்** திகதி வரையில் **(0900 மணி முதல் 1500 மணி வரையில்)** கொள்வனவு செய்திட முடியும்.

11. விலைமனுக்களை ஏற்றுக்கொண்ட பின்னர் **(2024.02.05 ஆம் திகதி 1100 மணிக்கு)** மனுதாரர்கள் மற்றும் அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் மனுக்கள் திறக்கப்படும். பிந்திக்கிடைக்கும் மனுக்கள் மற்றும் ஒன்லைன் வாயிலாக அனுப்பும் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

12. மனுதாரர்களின் விலைமனுக்கள் திறக்கப்பட்ட தினத்திலிருந்து **91 நாட்கள்** செல்லுபடியானதாக இருக்க வேண்டும்.

13. அனைத்து மனுதாரர்களும் **இலங்கை பணத்தொகையில் அறுபது இலட்சம் (ரூ.6,000,000.00)** பெறுமதியுடைய இலங்கை மத்திய வங்கியால் அனுமதிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் கொமர்ஷல் வங்கியின் ஊடாக தேவைக்கிணங்க ஒப்பந்தங்களின்றி பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கிப்பிணையினை (ITB 20.2) கொண்டிருக்க வேண்டியதோடு, வங்கிப்பிணையானது மனுக்கள் திறக்கப்பட்ட தினத்திலிருந்து **119 நாட்கள்** செல்லுபடியானதாக காணப்பட வேண்டும்.

14. மனுக்கு முந்திய கூட்டமானது **2024 ஜனவரி மாதம் 08ஆம் திகதி 1000 மணிக்கு** இலங்கை கடற்படை தலைமையகம், கொழும்பு 01 இல் நடைபெறும்.

15. உரிய விலைமனுக்களை **(2024 பெப்ரவரி மாதம் 05ஆம் திகதி 1100 மணிக்கு)** அல்லது அதற்கு முன்னர் கீழ்வரும் சமர்ப்பிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| பிரதான நிதி அதிகாரி I, இரண்டாம் மாடி, | | |
| பாதுகாப்பு அமைச்சு, | தொலைபேசி இல | : 011-2390719 |
| பாதுகாப்பு தலைமையக கட்டிடம், | பெக்ஸ் | : 011-2390720 |
| ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டை, இலங்கை. | மின்னஞ்சல் | : procurement@defence.lk |

16. மனுத்திறக்கும் மூன்று (03) வேலை நாட்களுக்கு முன்னதாக, மனுக்கோரலில் பங்கேற்கும் அங்கீகரிக்கப்பட்ட நபரின் பெயர் மற்றும் தே.அ.இல / கடவுச்சீட்டு இலக்கம் பாதுகாப்பு அமைச்சகத்தின் தலைமை நிதி அதிகாரிக்கு (1) எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க மனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

17. பாதுகாப்பு அமைச்சின் கொள்முதல் சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமே இறுதி முடிவாகும். எந்தவொரு திருத்தங்களை மேற்கொள்ளும் அதிகாரமும் அவர்களையே சாரும்.

18. மேலதிக விபரங்களுக்கு

| | |
|---|---|
| பிரதான நிதி அதிகாரி I, | பணிப்பாளர் பாதுகாப்பு சர்வதேச கொள்வனவு, |
| இரண்டாம் மாடி, | இலங்கை கடற்படை, |
| பாதுகாப்பு அமைச்சு, | த.பெ 593, |
| பாதுகாப்பு தலைமையக கட்டிடம், | மேல் செத்தம் வீதி, |
| ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டை, | கொழும்பு 01, |
| இலங்கை. | இலங்கை. |
| தொலைபேசி இல : 00-94-112390719 | தொலைபேசி இலக்கம் : 00-94-11-2445066 |
| பெக்ஸ் : 00-94-112390720 | பெக்ஸ் : 00-94-11-2448725 |
| மின்னஞ்சல் : procurement@defence.lk | மின்னஞ்சல் : slnnhqssofp@gmail.com |

**தலைவர்,**
**அமைச்சக வழங்கல் சபை,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**பாதுகாப்பு தலைமையக கட்டிட வளாகம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டை, இலங்கை.**

SELACINE